අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/21/08/01/2021

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2021.03.17

சுற்றுநிருப இலக்கம்: 04/2021

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவெனாதிபதிபள்,
அனைத்து அரச பாடசாலை அதிபர்கள்,
அனைத்து அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்,
அனைத்து அரச உதவி பெறும் பாடசாலை அதிபர்கள்
அனைத்து சர்வதேச பாடசாலை அதிபர்கள்

"சுரக்ஷா" மாணவர் காப்புறுதி –2020/2021

மேற்படி விடயமாக கல்வியமைச்சின் 24/2019 இலக்க மற்றும் 2019.04.11ஆம் திகதிய சுற்றுநிருபம் இத்தால் செல்லுபடியற்றதாகச் செய்யப்படுகிறது. இச்சுற்று நிருபம் 2020 டிசம்பர் 02ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது.

"நிதமும் காப்போம் - நாட்டின் குழந்தைகளை" எனும் தலைப்பில் செயற்படுத்தப்படும் "சுரக்ஷா" மாணவர் காப்புறுதி குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு 2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவிற்கு அமைவாக அரசினால் அறிமுகம் செய்யப்பட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒரு வேலைத்திட்டமாகும்.

அறிவு மற்றும் திறனில் முழுமை பெற்ற பிள்ளைகளை சமூகமயப்படுத்துவது கல்வி அமைச்சின் முக்கிய குறிக்கோளாகும். எல்லா வயதினருக்கும் பாதுகாப்பான சூழல் இருக்க வேண்டியது அத்தியாவசிய காரணியாகும். ஆதலால் மாணவச் செல்வங்களின் உடல் மற்றும் உள சமூகநிலை நன்நிலவுகைக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்திருப்பதுடன் பாடசாலையின் உள்ளும் அதற்கு வெளியிலும் ஏற்படும் நோய்கள், விபத்துக்கள் மற்றும் உபாதைகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையாக மாணவர் சுகாதார காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நோய், விபத்து மற்றும் உபாதைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களின்போது அவசர சுகாதார சேவைக்கு உட்படுத்தி பிள்ளைகளின் நலனை சீக்கிரமாக உறுதி செய்வதனூடாக தினமும் பாடசாலை வருகையை அதிகரித்தல், கடுமையான உபாதைகளுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில் தேவையான சிகிச்சைகளுக்கு உதவி புரிதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் "சுரக்ஷா" சிறுவர் காப்புறுதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் மூலமாக இலங்கையில் அனைத்து பாடசாலை மாணவர்களும் நன்மை பெறுவார்கள். அதாவது அனைத்து அரச பாடசாலைகள், உதவிபெறும் அல்லது உதவி பெறாத தனியார் பாடசாலைகள், பிரிவெனா, உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகள் போன்ற முறையான கல்வி நிறுவனங்களில் பதிவாகி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் 1 இல் இருந்து 13 ஆம் தரங்களிலும், விஷேட கல்வி அலகுகளில் கல்வி பயிலும் 5 முதல் 21 வரையிலான வயதெல்லை கொண்ட அனைத்து இலங்கை மாணவர்களும் இக்காப்புறுதியில் பயனாளிகளாவார்கள்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சுடன் வருடாந்த ஒப்பந்தங்களுக்கு உள்ளாகும் காப்புறுதி நிறுவனத்தின் மூலம் ஒரு வருடத்துக்கான காப்பீடு வழங்கப்படும். அதற்கமைவாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட **"இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தால்"** 2020 டிசெம்பர் 02 ஆம் திகதியில் இருந்து 2021 டிசெம்பர் 01 ஆம் திகதி வரை வருடத்தின் 365 நாட்களும் நாள் ஒன்றுக்கு 24 மணிநேரமும் தழுவுமாறு காப்புறுதி வழங்கப்படும்.

காப்புறுதி வசதிகள் மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். அவை 1, 2, மற்றும் 3 வரை காட்டப்பட்டுள்ளன.

1. **சுகாதாரக் காப்பீடு**

1.1 வதிவிட வைத்திய சிகிச்சைகள் - ரூ.200,000/- (அரச/தனியார்)

1.2 வெளிச் சிகிச்சைகள் ரூ.10,000/- (வழிகாட்டல் கோவையின் இரண்டாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நன்மைகள்)

1.3 கடுமையான நோய்களுக்கான சிகிச்சைகள்- ரூ.200,000/- தொடக்கம் 1,500,000/- வரை

2. **விபத்துக் காப்பீடு**

2.1 முழுமையான நிரந்தரமான ஊனம் - ரூ.200,000/-

2.2 நிரந்தர பகுதியளவு ஊனம் - ரூ.150,000/- தொடக்கம் ரூ.200,000/- வரை

2.3 தற்காலிக ஊனம்- ரூ.25,000/- தொடக்கம் ரூ.100,000/- வரை

3. **ஆயுட்காப்புறுதி**

3.1 பெற்றோரின் இறப்பின்போது ஒருவருக்காக ரூ.200,000/- (குறைந்த வருமானம் பெறும் குடும்ப மாணவர்களுக்கு மட்டும்.)

a. பெற்றோர் இருவரையும் உள்ளடக்குமாறு நன்மை உரித்தாகும்.

b. குடும்பத்தில் பாடசாலை செல்லும் சகல பிள்ளைகளுக்கும் நன்மைகள் கிடைக்கும் என்றாலும் ஒரு நிகழ்வுக்கு ஒதுக்கப்படும் உச்ச நிதி ரூ. 600,000/- ஆகும்.

மேற்படி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக "சுரக்ஷா" காப்பீட்டுத்திட்டத்தின் பயனாளி என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக உரிமை கோரும் படிவம் அதிபரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தல் கட்டாயமானதாகும்.

இக்காப்பீட்டுத் திட்டத்தின் வரையறைகள், நிபந்தனைகள், தேவையான ஆவணங்கள், ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய இடங்கள், காப்பீட்டு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் ஆகிய விபரங்கள் இணைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு காப்பீட்டு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும்போது கல்வி அதிகாரிகள், பாடசாலை பொறுப்பாளர்கள் ஆகியோர் நிறைவேற்ற வேண்டிய கடமைப் பொறுப்புக்கள்.

- மாகாணக் கல்விச் செயலாளரின் தலைமையில், மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பங்குபற்றலுடன் செயற்படும் சுகாதார மேம்பாட்டு குழு தேவையான தேடல்களையும் தலையீட்டினையும் மேற்கொள்ளுதல்.
- மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்விக் காரியாலயம், பாடசாலை ஆகியவற்றில் பொறுப்பாளராக அதிகாரியொருவரை/ஆசிரியர் ஒருவரை நியமித்தல்.
- தமது பாடசாலையில் கற்கும் மாணவர்கள் தொடர்பான தகவல்களை சரியாக வழங்குதல்.
- காப்பீட்டு நன்மையைப் பெறும்போது தகவல்களை உறுதிப்படுத்தல்.

- நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களின் விபரங்கள் அடங்கிய கோவையொன்றை (பௌதீக/ கணிணி மயப்படுத்தப்பட்ட) பாடசாலையில் பேணிவருதலும் தேவையான நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்குதலும்.
- பாடசாலைக்கு புதிதாக பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப்படும் போது தாமதமின்றி உரிய பிரிவுகளுக்கு அறிக்கையிடுதல்.
- பாடசாலை கல்வியிலிருந்து மாணவர்கள் விலகும் சந்தர்ப்பத்தில் அது பற்றி தாமதமின்றி **இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு** அல்லது அதன் கிளையொன்றுக்கு எழுத்து மூலமாக அறிவித்தல்.
- காப்பீட்டு நன்மைகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் தொடர்ந்தேர்ச்சியாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பாடசாலை சமூகத்துக்கும் அறியத்தருதல்.
- நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுவதில் சிக்கல்கள் தோன்றும்போது இடையீட்டாளராக செயற்படல்.
- மாணவர் காப்பீட்டு நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

ஒவ்வொரு கல்வி நிறுவனங்களுக்குமுரிய கடமைப் பொறுப்புக்கள் ஆலோசனைக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு சகிதம் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ள "சுரக்ஷா" காப்புறுதித்திட்டத்தின் நன்மைகள், நிபந்தனைகள் மற்றும் எதிர்ப்பார்க்கும் பொறுப்புக்கள் தொடர்பாக பொதுமக்களை தெளிவுபடுத்துவதற்கு கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆரோக்கியமான மாணவர் பரம்பரையொன்றை நாட்டுக்கு உரித்தாக்கவும், கிடைக்கப்பெற்றுள்ள கல்வி வாய்ப்புகளிலிருந்து உச்சப் பயனை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், மாணவர் காப்பீட்டின் உச்ச நன்மைகளை மாணவர்களுக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் கே.கபில சீ.கே.பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் -

1. ஜனாதிபதி செயலாளர் — தயவான அறிதல் பொருட்டு
2. பிரதமரின் செயலாளர், — தயவான அறிதல் பொருட்டு
3. கணக்காய்வாளர் நாயகம் — தயவான அறிதல் பொருட்டு
4. செயலாளர், நிதி அமைச்சு — தயவான அறிதல் பொருட்டு
5. செயலாளர், சுகாதார மற்றும் தேசிய வைத்திய அமைச்சு - தயவான அறிதல் பொருட்டு
6. செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உடகட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு - தயவான அறிதல் பொருட்டு
7. சகல மாகாண பிரதம செயலாளர்கள் - தயவான அறிதல் பொருட்டு

ஆலோசனைக் கோவை

1வது அத்தியாயம்- சுரக்ஷா மாணவர் காப்புறுதி

காப்புறுதி, காப்பீட்டு நிறுவனம், பயனாளிகள், பயனாளியாக தகுதி பெறுதல் பற்றிய விபரங்கள் இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.1 காப்புறுதி முறை

கல்வி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு இணைந்து அறிமுகப்படுத்தப்படும் காப்பீடு "சுரக்ஷா" மாணவர் காப்புறுதி எனப்படும்.

1.2 காப்புறுதி நிறுவனம்

கல்வி அமைச்சு மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 2020 டிசம்பர் 02 ஆம் திகதி முதல் 2021 டிசெம்பர் 01 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான காப்பீட்டினை வழங்கும்.

1.3 பயனாளிகள்

அரச பாடசாலைகள், உதவிபெறும் தனியார் பாடசாலைகள், உதவி பெறாத தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள், உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் 5-21 வயதெல்லையுடைய அனைத்து துறவறம் சாரா-துறவறம் சார் மாணவர்கள் இதன் பயனாளிகளாவார்கள்.

இந்த சுற்றுநிருபம் மற்றும் ஆலோசனைக் கோவையில் அரச பாடசாலைகள், உதவிபெறும் தனியார் பாடசாலைகள், உதவி பெறாத தனியார் பாடசாலைகள், உதவி பெறும் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் **"பாடசாலைகள்"**என பொருள்படுவதுடன். அடிப்படை பிரிவெனா, மகா பிரிவெனா மற்றும் வித்தியாயத்ன பிரிவெனா என்பன **"பிரிவெனாக்கள்"** என பொருட்படும். துறவறம் சாரா-துறவறம் சார் மாணவ மாணவிகள் **"மாணவர்கள்"**எனப் பொருட்படுவர்.

1.4 பயனாளிகளாவது

காப்புறுதி காலப் பகுதிக்குள் அரச பாடசாலைகள், உதவி பெறும் தனியார் பாடசாலைகள், உதவி பெறாத தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள், உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் 5-21 வயதெல்லையுடைய அனைத்து மாணவர்களும் பயனாளிகளாவதுடன் பாடசாலை பெயர் இடாப்பினுள் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட வயதெல்லையைக் கொண்ட மாணவர்கள் பயனாளிகளாவார்கள். பாடசாலையில் இருந்து விலகும் மாணவர்கள் பயனாளிகள் என கருதப்படமாட்டார்கள்.

1.5 மாணவ மாணவியரின் தகவல்களை பெற்றுக் கொள்ளல்

- பிரிவேனாதிபதி/ தனியார்.'. சர்வதேச பாடசாலை அதிபரினால் தமது பிரிவெனாவில்/பாடசாலையில் தற்போது கற்கும் மாணவர்களின் தகவல்கள் இணைப்பு 01க்கு ஏற்றவாறு முறையாக கணினி மயப்படுத்தி அதன் மென் பிரதியை suraksha.shnb@moe.gov.lk மின்னஞ்சல் முகவரிக்கும், வன் பிரதியை கல்வி அமைச்சின் சுகாதாரம் மற்றும் போசாக்கு கிளைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த தகவல்களை தேவையானவாறு கல்வி அமைச்சினால் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு பெற்றுக் கொடுத்தல்.
- அரச பாடசாலைகளுக்காக இணைப்பு 01 இல் குறிப்பிட்ட தகவல் இணையவழி மாணவர் (SIS) தரவு தளத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுவதால் விரைவாக தமது பாடசாலை மாணவர்களின் தகவல்களை இணையத்தள மாணவர் தரவு தளத்துக்கு உள்ளிட வேண்டும்.

- பாடசாலைக்கு புதிதாக மாணவர்களை அனுமதிக்கும் போது அந்த மாணவர் தகவல்களை தாமதிக்காமல் கல்வி அமைச்சுக்கு மற்றும் காப்புறுதி நிறுவனத்துக்கு அல்லது அதன் கிளைக்கு எழுத்து மூலமாக அறியத் தர செயற்படுதல், அந்த மாணவர் முன்னர் கல்வி கற்ற பாடசாலை தொடர்பாக தகவலை வழங்குதல்
- பாடசாலையிலிருந்து மாணவர் இடைவிலகும் போது அது தொடர்பில் தாமதமின்றி **இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கும், கல்வி அமைச்சுக்கும்** எழுத்து மூலம் அறியத் தருதல்

2வது அத்தியாயம் - காப்பீட்டு சந்தர்ப்பங்களும் நன்மைகளும்

சுகாதார நன்மைகள், விபத்து, மரணம் ஆகியவை தொடர்பான நன்மைகள், மேலதிக நன்மைகள் விஷேட நன்மைகளுக்கான சந்தர்ப்பங்கள், காப்பீட்டுத் தொகை பற்றிய விபரங்கள் இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.1 சுகாதார நன்மைகள் (செலவீனத்தை மீளச் செலுத்தல் மட்டும்)

2.1.1 வதிவிட சிகிச்சைக்குரிய நன்மைகள் ரூ.200,000

சகல உரிமங்களும் வருடத்துக்கான உரிமைத் தொகைக்கு கீழ்பட்டதாக செலுத்தப்படும்.

(அரச வைத்தியசாலை ஒன்றில் கட்டணம் செலுத்தும் வாட்டு மற்றும் அரச அனுமதிபெற்ற தனியார் வைத்தியசாலைக்காக)

a. வதிவிட சிசிச்சை மற்றும் மருந்துகளுக்கான செலவுகள் (அரச வைத்தியசாலை கட்டண வாட்டில், அரச அனுமதி பெற்ற தனியார் வைத்தியசாலை மற்றும் தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை நாளொன்றுக்கு உச்ச அறைக் கொடுப்பனவு ரூ.12, 500/-)
b. வைத்தியர் கட்டணம்/விஷேட வைத்திய நிபுணர் கட்டணம்/ அறுவை வைத்திய மற்றும் உணர்விழப்பு வைத்திய நிபுணர் கட்டணம்
c. சத்திரசிகிச்சை செலவுகள், நோய் நிர்ணய பரிசோதனை, மருந்துகள், சத்திர சிகிச்சை ஆரம்பநிலை பரிசோதனை செலவுகள், விஷேட வைத்தியரினால் பரிந்துரைத்த சிகிச்சைகள்.

அரச வைத்தியசாலை மற்றும் கட்டணம் செலுத்தப்படாத வாட்டுக்களுக்காக

a. அரச வைத்தியசாலை/ அரச ஆயுர்வேத வைத்தியசாலை கட்டணம் செலுத்தாத வாட்டு- (Non Paying ward) ரூ.1000.00 நாளாந்த கொடுப்பனவு
b. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாது செய்யப்படும் சத்திர சிகிச்சை செலவுகள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)
c. கடுமையான அல்லது ஆபத்தான நோய்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட விஷேட துணைப் போஷாக்கு உணவுகளுக்கான செலவுகள்

வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய பின் மருந்துக்காக ஒரு வார காலத்துக்கு (வெளியேறிய தினம் தொடக்கம்) கொடுக்கப்படும்.

குறைந்த வருமானம் பெறுவோர்க்கு மட்டும் கீழ்க்காணும் விடயங்களுக்கு நன்மைகள் கிடைக்கும்

a. வைத்தியரின் பரிந்துரையின் பேரில் வெளிநாடு ஒன்றில் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள்
b. நாட்பட்ட நோய்கள்/சத்திர சிகிச்சைகள்/ விபத்தின்போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றுக்கான செலவுகள் (TED/ Stockings/ AirMattress/ Water Mattress/ Rehabilitation Accessories/ Special Shoes/Walking Aids/ Crutches, etc)
c. விபத்தொன்றின் பின்னர் செய்யப்படும் அல்லது விபத்தினால் ஏற்படும் தழும்புகளுக்கு பிளாஸ்டிக் சத்திர சிகிச்சைக்கான செலவு

2.1.2 வெளிச் சிகிச்சை நன்மைகள் ரூ.10,000/-

மீள் கொடுப்பனவு மட்டும்

a. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாது செய்யப்படும் கீழ்க்காணும் பரிசோதனைகளுக்கான செலவுகள் (1. EEG 2. MRI 3. CT Scan 4. DMSA Scan 5. DTPA Scan 6. Ultra Sound Scan)

b. பல் உபாதைகளுக்கான சிகிச்சைகள் (பல் அகற்றல், நிரப்புதல் மாத்திரம்)

c. விபத்து காரணமாக ஏற்படும் நோய் நிலைமை காரணமாக ஆயுர்வேத சிகிச்சை பெறுதல் (அரச அனுமதி பெற்ற ஆயர்வேத வைத்தியசாலை)

கீழ்க்காணும் நன்மைகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பது வைத்திய அலுவலரின் அல்லது சுகாதார வைத்திய அலுவலர் அல்லது என்பு சிகிச்சை வைத்தியரின் பரிந்துரையின் படி மட்டுமே. **(இதன் போது மீள் கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மையாகும். என்றாலும் குறைந்த வருமானமீட்டுபவர்களுக்கு இந்த வசதி நேரடியாக கொடுப்பனவு செய்யும் முறையின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.)**

a. கண், செவி, கேட்டல் பாதிப்புகளுக்கான சிகிச்சை

b. கண் மற்றும் காது பாதிப்புகளைச் சரி செய்யும் உபகரணங்கள் பெற்றுக் கொள்ளல் சுகாதார வைத்திய அலுவலரின் பரிந்துரை அல்லது என்பு சத்திர சிகிச்சை வைத்தியரின் அனுமதி தேவை. (உதா: மூக்குக் கண்ணாடி, கேட்டல் உபகரணம் பெற்றுக் கொள்ளல்)

2.1.3 கடுமையான நோய்களுக்கான காப்பீடு- ரூ.1,500,000/- வரை

உள்நாட்டு வைத்தியசாலையொன்றில் சிசிச்சை பெற்றுக்கொள்ளும்போது பற்றுச்சீட்டுச் செலவினை ஈடுசெய்வதினூடாகவோ அல்லது நேரடியாகவோ செலுத்தப்படுவதோடு வெளிநாட்டு வைத்தியசாலை சிகிச்சை ஆயின் செலவானது மீள் கொடுப்பனவு செய்தல் ஊடாக மாத்திரம் செலுத்தப்படும். சிகிச்சைக்காக வெளிநாடு செல்லக் கூடியது இலங்கையில் உரிய சிகிச்சை இன்மை மற்றும் அவசர சிகிச்சை தேவை என்றாலும் காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் மட்டுமே.

ஆபத்தான/ கடுமையான நோய்க் காப்பீட்டு சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

- இருதய சத்திரசிகிச்சை (Heart Surgery)
- புற்றுநோய்ச் சிகிச்சை(Cancer Treatment)
- சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை(Kidney Transplantation)
- இரத்தத்தலிருந்து சிறுநீர் பிரித்தெடுப்பு (Dialysis)
- இடுப்பு, தோள்பட்டை, முழங்கால் எலும்பு பிரதியீடு (Hip, shoulder, knee Replacement)
- மூளைச் சத்திரசிகிச்சை (Brain Surgery)
- முதுகெலும்பு திரிபினை சீராக்கல் சத்திர சிகிச்சை (Scoliosis)
- வால்நரம்பு உள்வைத்தல் சத்திரசிகிச்சை(Cochlear Implantation)
- முண்ணான் சுருக்க சத்திரசிகிச்சை (Spinal cord compression)
- கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சை(Liver Transplant)
- கண் சத்திர சிசிச்சை (Eye Surgery) (திடீர் விபத்து காரணமான சிகிச்சை, கண் வில்லை பொருத்தல்,
- செயற்கை கை/கால் உபகரண கொள்வனவு (Artificial limbs)
- என்பு மச்சை மாற்று சத்திரசிகிச்சை (Bone Marrow Transplantation)
- தலசீமியா (Thalassemia)

2.2 அவசர விபத்து நன்மைகள் - மீள் கொடுப்பனவு அடிப்படையில் (Reimbursement Basis)

முழுமையான மற்றும் நிரந்தர ஊன நன்மை (ஒரு தடவை அல்லது ஒரு வருடத்துக்கான உச்ச வரம்புத் தொகை)

2.2.1 முழுமையான மற்றும் நிரந்தர ஊனம் ரூ.200,000/-

- இரண்டு கண்களிலும் பார்வை இழப்பு ரூ.200,000/-
- இரண்டு காதுகளிலும் கேள்வி இழப்பு ரூ.200,000/-
- இரண்டு கால்களை/கைகளை இழத்தல் ரூ.200,000/-
- ஒரு கண் மற்றும் ஒரு கை/கால் இழப்பு ரூ.200,000/-
- ஒரு காது மற்றும் ஒரு கை/கால் இழப்பு ரூ.200,000/-
- ஒரு கண் மற்றும் ஒரு காது இழப்பு ரூ.200,000/-

2.2.2 நிரந்தர அறை குறையான பாதிப்புகள் ரூ.150,000 தொடக்கம் ரூ.200,000 வரை

- ஒரு கண் இழப்பு ரூ.150,000
- ஒரு கை/கால் இழப்பு ரூ.150,000
- ஒரு காது இழப்பு ரூ.150,000

2.2.3 தற்காலிக செயலிழப்புக்காக ரூ. 25,000/- தொடக்கம் ரூ 100,000/-

வீட்டிலிருந்து சிகிச்சை பெற வேண்டியிருப்பின் அக்காலத்துக்கு ஏற்ப கொடுப்பனவு தீர்மானிக்கப்படும். இதற்கு அரசினால் அனுமதிக்கப்பட்ட வைத்தியரின் (ஆயுர்வேத சிகிச்சையும் உள்ளடங்கும்) பரிந்துரையுடன் கூடியதாக காப்புறுதி நிறுவனத்திடம் கோரும் எழுத்தாவணங்களை முன் வைக்க வேண்டும்.

- இரண்டு வாரம் தொடக்கம் 01 மாதத்துக்கிடையில் ரூ.25,000/-
- 01 மாதம் தொடக்கம் 02 மாதங்களுக்கிடையில் ரூ.50,000/-
- 02 மாதங்களுக்கு மேல் ரூ.100,000/-

2.3 மரணம்

இந்த நன்மைக்காக உரித்தான அரச நிர்ணயத்துக்கு அமைய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்கள் மட்டுமே. அதற்கமைய,

- வருடாந்த வருமானம் ரூ.180,000/- இக்கும் குறைவான குடும்பத்தின் மாணவர்கள்.
- வருமான நிலைமை குறித்த சான்றிதழ் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2.3.1 பெற்றோர் /சட்டபூர்வமான பாதுகாவலர் இழப்பின் போது ஒருவருக்காக ரூ.200,000/-

- வருடத்தில் பெற்றோர் இருவருக்கும்
- குடும்பத்தில் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் காப்பீடு உண்டு

ஒரு சம்பவம் (மரணம்) தொடர்பாக செலுத்தப்படும் உச்சளவு நிதி ரூ.600,000/- மட்டுமே. குடும்பத்தில் பாடசாலை வயதில் மாணவர் எண்ணிக்கை மூவருக்கு அதிகமாகும் போது உச்ச பட்ச நிதி சமமாக பாடசாலை செல்லும் அனைத்து மாணவர்களிடையே பகிரப்படுமாறு உரித்து வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

பெற்றோர்/ பாதுகாவலர் மரணத்தின்போது காப்பீட்டுத் தொகை செலுத்தப்படுவது மாணவருக்கு மாத்திரமே. அவர் துறவி மாணவனாக இருப்பின் கொடுப்பனவு செய்வது சட்டபூர்வமான பெற்றோருக்கே மட்டுமே. (உயிருடன் இருப்பின்) பாதுகாவலரின் கீழ் உள்ள பிள்ளைகளுக்கு கொடுப்பனவு செய்வது பாதுகாவலர் உரித்து நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்தால் மாத்திரமே.

சட்டரீதியான பாதுகாவலர் மரணிக்கும் போது முன்வைக்கும் உரிய விண்ணப்பப் படிவத்துடன் பாதுகாவலர் உரித்து வழங்கப்பட்ட சட்டரீதியான ஆவணம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

- மாணவர் இறப்பின்போது இழப்பீடு வழங்கப்பட மாட்டாது

3வது அத்தியாயம் - நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல்

நன்மைகள் உரித்தாகாதிருத்தல், தழுவல் அல்லாத செலவீனங்கள், நன்மைகளைப் பெற்றுக்கொள்ள சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், காப்பீட்டு செயன்முறையில் நன்மைகள் கிடைக்காத சந்தர்ப்பங்கள், பற்றுச்சீட்டுகள் மீதான மீள் கொடுப்பனவு என்பன இவ்வத்தியாயத்தில் விபரிக்கப்படும்.

3.1 நன்மைகள் உரித்தாகாதிருத்தல்

அரச அங்கீகாரம் உரித்தாகாத/ சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்படாத வைத்தியசாலை அல்லது மருத்துவமனையொன்றில் வதிவிட சிகிச்சைகளை பெறும் சந்தர்ப்பத்தில் நன்மைகள் இழக்க நேரிடும்.

3.2 உள்ளடங்காத செலவீனங்கள்

கீழ்காணும் செலவீனங்கள் உள்ளடங்காது என்பதை விசேட கவனத்திற்கு கொள்ளுவது முக்கியமாகும்.

- விமான டிக்கட்டுகள் (வெளிநாட்டு சிகிச்சையின்போது)
- வானில் ஏற்படும் விபத்துகள்
- உடல் நல குளிப்பு (SPA)
- நோய் தன்மை இல்லாமல் வைத்தியசாலையில் அனுமதித்தல் அல்லது நோய்த் தன்மைக்கு பொருத்தமில்லாத செலவு
- வைத்தியரினால் அனுமதிக்கப்படாத செலவு
- விபத்தின் போது அன்றி செய்யப்படும் சுன்னத் சத்திரசிகிச்சை செலவு (Circumcsion)
- நோய்க்குரிய சிகிச்கைக்கு அப்பாற்பட்ட செலவுகள் (தொலைபேசி செலவு, உணவு, சேவைக் கட்டணங்கள் முதலியன)
- சட்டவிரோத செயல்களின்போது ஏற்படும் விபத்து/ நோய்/அங்கவீனம்
- விபத்து காரணமாக அன்றி மேற்கொள்ளப்படும் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை/ அழகு மேம்படுத்தல் சிகிச்சை/ உடற்பருமனை குறைத்தல் சிகிச்சை முதலிய அழகு மேம்பாட்டுக்கான சிகிச்சை
- கருவுற்றல் மற்றும் மகப்பேறு
- ஹோமியோபதி சிகிச்சை
- உடல் உறுப்புகளை வழங்கவதற்காக வைத்தியசாலையில் தங்குதல் (Hospilization for donation of an organ)

3.2.1 தீவிர / கடுமையான நோய்கள்/அங்கவீனத்தின் போது உள்ளடங்காத செலவுகள்

- தற்றுணிவின் அடிப்படையில் மேற்கொள்ளும் விபத்து/அங்கவீனம் (உதா. தற்கொலை)
- மதுபானப் பாவனை சந்தர்ப்பம் அல்லது வைத்தியரினால் அங்கீகாரிக்கப்படாத அல்லது ஆலோசனை வழங்கப்படாது மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள்
- வைத்தியரின் அங்கீகாரம் இன்றி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறல் அல்லது தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு அனுமதியில்லாத நோய்களுக்கு சிசிச்சை பெற்றமைக்கான செலவு
- யுத்தம், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, இரு தரப்புக்கிடையான பிணக்கினால் சண்டை ஆகிய நிலைமைகளின் போது ஏற்படும் தீங்கு/ சேத செலவு

- கலகம் விளைவிப்பு நடத்தை, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் போது ஏற்படும் அனர்த்தம்
- அனுமதியின்றி செய்யப்படும் வான் சாகசங்களில் ஏற்படும் அனர்த்தம்/ அங்கவீனம்

3.3. நன்மைகள் பெறுவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

வைத்தியசாலை ஒன்றில் இருந்து வெளியேறிய பின்பு கீழ்க்காணும் ஆவணங்களின் மூலப்பிரதியை சமர்ப்பிக்க வேண்டும். நோயாளியின் தேவைக்காக நிழற்பிரதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். கீழ்க்காணும் ஆவணங்களை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்துக்கோ அல்லது அண்மையில் உள்ள இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்குரிய கிளையொன்றுக்கு ஒப்படைக்கவோ அல்லது பதிவுத்தபாலில் அனுப்பவோ வேண்டும். இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கிளைகளின் விபரங்கள் அடங்கிய அட்டவணையொன்று இணைப்பு 03 இல் காணப்படுகின்றது. காப்புறுதி உரிமைப் பத்திரம் இணைப்பு 04 இல் காணப்படுகிறது

நன்மைளை பெறுவதற்கான சந்தர்ப்பங்களும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களும்

- கொடுப்பனவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டுகளின் மூலப்பிரதி முன்வைக்கப்பட வேண்டியதோடு ஏனைய யாதும் ஆவணங்களின் பிரதிகள் முன்வைக்கும் போது அந்த ஆவணங்கள் அதிபரால் அல்லது இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாதாயினும் கிளையின் முகாமையாளர், நிர்வாக அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட வேண்டும்.
- குறை வருமானமீட்டுபவர்களுக்கு மட்டும் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் போது பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தி கையொப்பமிட்ட குறை வருமாமீட்டுபவர் என உறுதிப்படுத்தப்பட் கிராம அலுவலர் சான்றிதழ் முன்வைக்கப்படவேண்டும்.
- தாய்/ தந்தைக்கு பதிலாக சட்டரீதியான பாதுகாவலரின் வங்கிக் கணக்கு விபரம் முன் வைக்கும் அவர் சட்டரீதியான பாதுகாவலர் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- நன்மை பெறும் போது சம்பவம் நடந்து 90 நாட்களுக்குள் உரித்து பெற்றுக்கொள்ளும் பத்திரம் முன்வைக்கப்பட வேண்டும். என்றாலும் காப்பீடு இறுதியாகும் 2021.12.01 திகதியிலிருந்து 30 நாட்களுள் அனைத்து காப்பீட்டு உரித்து விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- அதன் படி கடைசி மாதத்துக்குரிய காப்பீட்டு உரித்து படிவம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 2021.12.31 திகதி ஆகும்.

1. அரச வைத்தியசாலைகளுக்கு	உரித்து படிவம், கட்டில்சேர் அட்டை/ நோய் நிர்ணய அட்டை, சாயன அட்டை, வெளியில் பெற்றுக்கொண்ட மருந்துகள் மற்றும் பரிசோதனைகளுக்காக வைத்தியரினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்து சீட்டு (காரியாலய முத்திரையுடன்) அதற்குரிய கட்டணம் செலுத்தய ரசீதின் மூலப்பிரதி, தாய்.'. தந்தை.'. பாதுகாவலரின் வங்கிக் கணக்கு
2.தனியார் வைத்தியசாலைக்குள்ளாகும் போது பில்களை மீளக் கொடுப்பனவு செய்வது மட்டும்	உரித்து படிவம் ,நோய் நிருணய அட்டை, கொடுப்பனவு செய்த ரசீது (இறுதி மற்றும் மற்றும் முற் கொடுப்பனவு), விபரமான பில்களின் மூலப்பிரதி, தாய்/ தந்தை/ பாதுகாவலரின் வங்கிக் கணக்கு

3 வெளிவாரி சிகிச்சை (மூலப்பிரதி)	உரித்து படிவம், வைத்தியரின் உத்தியோகபூர்வ முத்திரை, திகதி, முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் கூடிய மருந்து சீட்டு, விபரமான பில், கொடுப்பனவு செய்த ரசீதின் மூலப்பிரதி, தாய் / தந்தை / பாதுகாவலரின் வங்கிக் கணக்கு விபரம்
4. பெற்றோரின் மரணத்தின் போது	உரித்து படிவம், மரண சான்றிதழ் அல்லது தற்காலிக மரணச் சான்றிதழ், மரண பரிசோதனை அறிக்கை (தேவையான சந்தர்ப்பங்களில்) மாணவரின் பிறப்புச் சான்றிழ் பிரதி, மாணவரின் வங்கிக் கணக்கு விபரம், இறந்தவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி, குறை வருமான மீட்டுபவர் என பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்,
6. நிரந்தர/ பகுதியளவான/ தற்காலிக பாதிப்புகள்	உரித்து படிவம், நோய் நிர்ணய அட்டை, வைத்திய அறிக்கையும் சிபாரிசும். தாய் / தந்தை /பாதுகாவலரின் வங்கி கணக்கு
7. கடுமையான நோய்க்கான நன்மை பெறும் போது நேரடி கொடுப்பனவின் போது	உரித்து அட்டை, விசேட வைத்தியரின் பரிந்துரைக் கடிதம் மற்றும் செலவு உத்தேச மதிப்பீடு, நோய்க்குரிய ஏனைய வைத்திய அறிக்கை, பெற்றோர் / பாதுகாவலரின் கோரிக்கைக் கடிதம், மாணவரின் பிறப்புச் சான்றிதழ் பிரதி, வைத்தியசாலை கட்டணம் செலுத்திய ரசீது அல்லது வைத்தியசாலையில் பெற்றுக் கொண்ட செலவு மதிப்பீடு
மீள்கொடுப்பனவின் போது	உரித்து படிவம், விசேட வைத்தியரின் பரிந்துரைக் கடிதம், கொடுப்பனவு செய்த ரசீது (இறுதி மற்றும் முற்கொடுப்பனவு), விபரமான பற்றுச்சீட்டுகளின் மூலப்பிரதி, தாய் / தந்தை / பாதுகாவலரின் வங்கிக் கணக்கு விபரம், ஏனைய அவசிய கடிதங்கள், மாணவரின் பிறப்புச் சான்றிதழின் பிரதி

3.4 பற்றுச்சீட்டுகள் மீதான கொடுப்பனவு

3.4.1 நேரடி கொடுப்பனவு வசதிகள். இந்த முறையில் கொடுப்பனவு ஆபத்தான நோய்களுக்கும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மூக்குக் கண்ணாடி, காது உபகரணங்கள் பெற்றுக்கொள்ளவும் வழங்கப்படும்

3.4.2 பற்றுச்சீட்டுகள் மீதான மீள் கொடுப்பனவு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளைக்கு விண்ணப்பங்களை இணைப்பு 04க்கு அமைய சமர்ப்பித்து முறையாக உறுதி செய்யப்பட்டு தேவையான ஆவணங்களுடன் சமர்ப்பித்த பின் விரைவில் கொடுப்பனவுகள் செய்யப்படும்.

3.5 ஆவணங்களை கையளித்தல்

- இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் கிளையொன்றுக்கு கையளித்தல்
- இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்திற்கு கையளித்தல் அல்லது கீழ்காணும் விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்புதல்.

முகாமையாளர்,
"சுரக்ஷா" காப்புறுதி
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், 13 வது மாடி
காப்புறுதி இல்லம்,
இலக்கம் 21, வொக்ஸ்வோல் வீதி, கொழும்பு 02

4வது அத்தியாயம் - வெவ்வேறு கல்வி நிறுவனங்களுக்குரிய செயற்பாடுகள்

4.1 கல்வி அமைச்சு

வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தோடு செயற்குழுவொன்றை அமைத்தல், அதில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பிரதிநிதிகளோடு அடங்கியிருத்தல்.

- பாடசாலை தவணைக்கு ஒரு தடவை கூட்டத்தை நடாத்துவது மற்றும் அறிக்கைக் கோவையொன்றை பேணுதல்
- இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் உரிய ஏனைய நிறுவனங்களுடன் இணைப்பாக்கம் செய்தல்.
- கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதாரம் மற்றும் போசாக்கு கிளை மூலமாக இணைப்பாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இந்த விடயம் சம்பந்தமாக துரித அழைப்பு எண்ணொன்றை தாபித்தல், துரித அழைப்பு எண்ணாக 011 278 7979 பாவிக்கப்படுவதுடன் சிக்கல்கள் தோன்றும் தருணங்களில் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக மு.ப.8.30 மணியில் இருந்து பி.ப.4.15 மணிவரை தொடர்பு ஏற்படுத்தி தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.
- சமூகத்தை அறிவுறுத்தும் மற்றும் பாடசாலை சமூகத்திற்கான வழிநடத்தலை மேற்கொள்ளுதல்
- மாகாண கல்வி அமைச்சில், மாகாண கல்வித் திணைக்களத்தில், வலய கல்வி அலுவலகத்தில் மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களில் வேலைத் திட்டங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்
- பாடசாலைகளில் மாணவர் தகவல்களை காப்புறுதி நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுத்தல் மற்றும் தகவல்களை புதுப்பித்தல்
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது குறித்து எழும் பிரச்சினைகளின் போது இடையீட்டாளராக செயற்படுதல்

4.2 மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம்

- மாகாணக் கல்விச் செயலாளரின் தலைமையில் குழுவொன்றை அமைத்தல், மாகாணக் கல்விப் பணிப்பாளர், சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாண சுகாதார செயலாளர் மற்றும் மாகாண சுகாதார அத்தியட்சகர், தமது மாகாணத்திற்குரிய மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்கள், மாவட்டம் தழுவலாகும் விதத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதிகள் அதில் உறுப்பினராகுதல்
- பாடசாலை தவணையில் ஒருமுறை கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அறிக்கை கோவையொன்றை பராமரித்தல்

- மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நிகழ்ச்சிகளை பொறுப்பேற்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்
- குழுக் கூட்டங்கள் பாடசாலை தவணைக்கு ஒருமுறை நடாத்துதல் மற்றும் அவசர நிலைமைகளை கருத்திற் கொண்டு தேவைக்கேற்ப விசேட கூட்டங்களை நடாத்துதல்
- மாகாணத்தில் இருக்கும் அனைத்து பாடசாலைகளையும் சார்ந்த மாணவர் தகவல்களை முறையான விதத்தில் உரிய பிரிவுகளுக்கு வழங்குதலைப்பற்றி ஆராய்தல்
- பாடசாலை சமூகம் மற்றும் மக்களை அறிவுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்தல்
- மாகாணத்திற்குரிய மாணவர் ஒருவருக்கு காப்பீடுகளை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக பிரச்சினைகள் உருவாகும் தருணங்களில் இடையீட்டளராக செயற்படுதல்
- காப்புறுதி நிறுவனம் மற்றும் மாகாணத்தில் இருக்கும் கிளைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்தல்
- பாடசாலை மாணவர் தகவல்களை காப்புறுதி நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும் தகவல்களை புதுப்பித்தல்
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது குறித்து பிரச்சினைகள் ஏற்படும்போது இடையீட்டாளராக செயல்புரிதல்

4.3 வலயக் கல்வி அலுவலகம்

- வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் குழுவொன்றை ஸ்தாபித்தல், கோட்டத்திற்கு பொறுப்பான பிரதி கல்விப் பணிப்பாளர்.\.உதவிக் கல்விப் பணிப்பாளர், வலய கல்வி அலுவலகத்தைச் சார்ந்த சுகாதார வைத்தியர்கள் உள்ளிட்ட குழுவொன்றை அதன் உறுப்பினர்களாக நியமித்தல்
- பாடசாலை தவணைக்கு ஒருமுறை கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்குறிய கோவை ஒன்றை பராமரித்தல்.
- அனைத்து கல்வி வலயங்களிலும் மாணவர் காப்பீடு நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்
- கோட்டக் கல்வி ஒருங்கிணைப்பு பொறுப்புகளை கோட்ட கல்விக்கு பொறுப்பான பிரதி .\.உதவி கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைத்தல்
- கல்வி வலயத்திற்குச் சொந்தமான பாடசாலை தகவல்களை உரிய நேரத்திற்கு வழங்குவது மற்றும் புதிய தகவல்களை புதுப்பிப்பதைக் குறித்து நடவடிக்கை எடுத்தல்.
- கல்வி வலயத்திற்கு சொந்தமான பாடசாலை சமூகம் மற்றும் பொது மக்களை அறிவுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்தல்.
- வலயத்திற்குட்பட்ட மாணவர் ஒருவருக்கு காப்பீடு ஒன்றை பெற்றுக்கொள்வது குறித்து பிரச்சினைகள் ஏற்படும் தருணத்தில் இடையீட்டாளராக செயற்படுதல்
- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கல்வி வலயத்திற்குள் அல்லது அண்மையில் இருக்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கிளையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்
- பாடசாலை மாணவர்களின் தகவல்களை காப்புறுதி நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுத்தல் மற்றும் தகவல்களை புதுப்பித்தல்
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது குறித்து ஏற்படும் பிரச்சினைகளுக்கு இடையீட்டாளராக செயற்படுதல்

4.4 பிரிவெனா/ பாடசாலைக்குரிய செயற்பாடுகள்

- பிரிவெனாதிபதி, பாடசாலை அதிபரின் தலைமையில் குழுவொன்றை நியமித்தல், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள், கல்விசாரா உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளடங்கும் விதத்தில் பாடசாலை தேவைக்கேற்ப உறுப்பினர் எண்ணிக்கையினை முடிவுசெய்து தாபித்தல்
- பாடசாலை தவணையில் ஒருமுறை கூட்டங்களை நடாத்துவது மற்றும் அறிக்கை கோவையொன்றை பராமரித்தல்

- தமது பாடசாலையில் சமகாலத்தில் கல்வி பயிலும் மாணவர்களை பற்றிய தகவல்களை முறையான விதத்தில் கணினிமயப்படுத்தி பெற்றுக்கொடுத்தல்
- காப்புறுதி செயற்பாடுகளுக்கான பொறுப்பை பாடசாலை பிரதி அதிபரிடம் அல்லது உதவி அதிபரிடம் எழுத்து மூலமாக ஒப்படைத்தல். அவ்விடத்தில் ஒருவர் இல்லாதவிடத்து ஆசிரியர் ஒருவருக்கு பொறுப்புச்சாட்டுதல்.
- பாடசாலைக்கு புதிதாக மாணவர் ஒருவர் சேரும் போது அல்லது மாணவர் ஒருவர் பாடசாலை விட்டு விலகும் போது அது குறித்தான தகவல்களை தாமதமின்றி உரிய பிரிவிற்கு வழங்குதல்
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது பற்றி மாணவர்கள், பெற்றோர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர் குழாம் மற்றும் பாடசாலை சமூகத்தை அறிவுறுத்தல்
- காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வது குறித்து மாணவர்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் தருணங்களில் இடையீட்டாளராக நின்று செயற்படுதல்.
- தமது பாடசாலைக்கு அருகில் இருக்கும் காப்புறுதி நிறுவனக்கிளையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் அந்த கிளைகளைக் குறித்து தகவல் கோவையொன்றை பராமரித்தல்
- தமது பாடசாலையில் காப்புறுதி நன்மைகளை பெற்றுக்கொள்வதைப் பற்றி தகவல் கோவையொன்றை பராமரித்தல்
- காப்புறுதி விண்ணப்பப் படிவங்களை முறையான விதத்தில் உறுதிப்படுத்தி தாமதமின்றி சமர்ப்பித்தல்

5வது அத்தியாயம் - கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை

கண்காணிப்பின் போது எதிர்பார்க்கப்படும் கடமைகள் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக்கு ஏற்றதாக பல்தரப்பட்ட நிறுவனங்கள் செயற்பட வேண்டிய விதம், விஷேடமான கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள், தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்கள் இவ்வத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

5.1 கண்காணிப்பின் போது எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகள்

- முறையான விதத்தில் மாணவர் தகவல்களை வழங்குதல்
- பாடசாலை விட்டுச்செல்லும் மாணவர் பற்றிய தகவல்களை உரிய நேரத்தில் வழங்குதல்
- நன்மைகளை பெற்றுக்கொள்வது பற்றிய தகவல்களை பராமரித்தல்
- முறையான விதத்தில் குழுக்கூட்டங்களை நடாத்துதல்
- காப்பீடு பெற்றுக்கொள்வதற்காக உதவி புரிதல் மற்றும் வழிகாட்டல்

5.2 நிறுவனங்கள் செயற்படவேண்டிய விதம்

5.2.1 தேசிய மட்டம்

கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதார மற்றும் போசணை கிளை போலவே இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தாலும் மேற்கொள்ளப்படும். ஏதேனும் பிழைகளை இனங்கண்டால் அல்லது முறைகேடுகள் குறித்து தெரியவந்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இந்நிருவனங்களுக்கு உள்ளது.

5.2.2 மாகாண மட்டம்

மாகாணக் கல்வி செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அவர்களால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் மூலமாக மேற்கொள்ளப்படும்.

5.2.3 வலய மட்டம்

வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அவரால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள், கோட்டத்திற்கு பொறுப்பான பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலமாக காப்பீடு பெற்றுக்கொள்வதற்குரிய விடயங்கள் கண்காணிப்பு செய்யப்படும்.

5.2.4 பாடசாலை மட்டம்

அதிபர் அல்லது அதிபரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஆசிரியர் / அலுவலர் ஊடாக காப்பீடு வழங்குதல் அது தொடர்பான பணிகள் கண்காணிக்கப்படும்.

5.3 விசேட கவனத்திற்கு உள்ளாக வேண்டிய விடயங்கள்

- கொடுப்பனவுகளை வழங்குதற்கு முன்னால் மேலதிக ஆவணங்களை கோருவதற்கோ அல்லது உரிய உரிமங்கள் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விசாரணை மேற்கொள்ளும் உரிமை இலங்கை காப்புதிக் கூட்டுத்தாபனத்துக்கு சார்ந்ததாகும்.
- உரிமைகளை வெளிப்படுத்துவது செலவினங்களுக்குரிய ஆவணங்களின் மூலப் பிரதிகள் அல்லது கோரப்பட்டிருக்கும்படி ஆவணங்களை சமர்ப்பித்தால் மாத்திரமே.
- பொய்யான உரிமைகளை கோரி நிற்பது உரிமைகளை இழப்பதற்கு காரணமாக அமைவதுடன் காப்பீட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அல்லது வேறு தகுதியான தண்டனைக்கு உள்ளாக நேரிடுவதற்கு ஒரு காரணியாக கருதப்படும்.
- அனைத்து உரிமைகளும் பற்றுச்சீட்டு திகதியில் இருந்து 03 மாதத்திற்குள் (90 நாட்கள்) சமர்ப்பிக்க வேண்டியதோடு 01.12.2021 ற்குப் பிறகு காப்பீடு காலாவதியாகி 1 மாதத்துக்கு பிறகு 2021.12.31க்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டுகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படாது.
- நீண்டநாள் சிகிச்சைகளைத் தவிர மருந்து அட்டை வழங்கிய தினத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் மருந்து அல்லது பரிசோதனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அனைத்து சிகிச்சைகளும் ஆடீடீளு அல்லது னுயுஆளு அல்லது அதற்கு சமமான அல்லது மேலான தகைமைகளைக் கொண்ட வைத்தியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் மீண்டும் அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் உரிய மூல பிரதியின்படி நிழற்பிரதியொன்றை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் கிளையொன்றில் உறுதிப்படுத்தி பெற்ற பின்னர் மூலப் பிரதியை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆயினும் பற்றுச்சீட்டுகளின் ரசீதுகளின் மூலப் பிரதிகளை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது.

5.4 தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்

1. மேலதிக தகவல்கள் வெப் தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்

   a. www.srilankainsurane.com

   b. www.moe.gov.lk
2. தொலைபேசி இலக்கம் -

   இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் - 0112357357 (24 மணி நேர அழைப்பு)

   இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் - 0112319015 (வார நாட்களில் அலுவலக நேரத்துள் மு.ப 8.30 பி.ப 4.45)

4 கல்வி அமைச்சு 0112787979